ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 2349/39 – 2023 සැප්තැම්බර් මස 15 වැනි සිකුරාදා – 2023.09.15
*2349/39 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழான கட்டளை

**2023 ஆம் ஆண்டின் 175 ஆம் இலக்கக் கட்டளை**

எனது குறிப்பு இல. : 4-3/11/2021/CEB/338.
பிரதேச செயலாளர் குறிப்பு இல. : 09/03/01/2021/03.

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் நாலக்க ஜூட் ஹரின் பெர்னாண்டோ ஆகிய நான், இங்கு கீழ்க் காணும் அட்டவணையின் 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட காணி எடுத்தல் உத்தியோகத்தருக்கு அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் உத்தியோகத்தரொரு வருக்கு அவ் அட்டவணையின் நேரொத்த 2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட காணியின் உடைமையை பொறுப்பேற்பதற்கு இத்தால் கட்டளையிடுகின்றேன்.

ஹரின் பெர்னாண்டோ,
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர்.

சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு,
"மிஹிகத மெதுர",
காணிச் செயலகம்,
இல.1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2023, ஓகத்து 31.

**அட்டவணை**

1. **காணி எடுத்தல் உத்தியோகத்தர்**: பிரதேச செயலாளர், திவுலபிட்டிய.

2. **காணியின் விபரம்** : மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்தில் திவுலபிட்டிய பிரதேச செலாளர் பிரிவில் யட்டிகஹ பற்று சிறு பிரிவில் 46, பஹல மடிதியவெல கிராம அலுவலர் பிரிவில் பொத்தேகெதர கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2022.12.14 ஆந் திகதிய GA/DIV/2022/129 ஆம் இலக்க முதற்சுவட்டு வரைபடத்தில் விபரமாக காட்டப்பட்ட பின்வரும் பெயர்கள், விஸ்தீரணத்தைக் கொண்ட காணித் துண்டுகளின் எல்லைகள்:

01. **துண்டு 'A' - மடிதியவெல வத்தை- விஸ்தீரணம் : 0.0207 ஹெக்டயார்**

வடக்கு: இலங்கை மின்சாரசபை உரிமைகோரும் மடிதியவெல வத்தை மற்றும் பாதை; கிழக்கு:பாதை; தெற்கு: துண்டு B, பி.கே. பத்மநாத உரிமைகோரும் மடிதியவெல வத்தை மற்றும் இந்த காணியின் எஞ்சிய பகுதி; மேற்கு: இந்த காணியின் எஞ்சிய பகுதி மற்றும் இலங்கை மின்சாரசபை உரிமைகோரும் மடிதியவெல வத்தை.

*02.* **துண்டு 'B' - மடிதியவெல வத்தை- விஸ்தீரணம் : *0.0894* ஹெக்டயார்**

வடக்கு: இந்த காணியின் எஞ்சிய பகுதி, ரீ நந்தன மெண்டிஸ் மற்றும் இன்னும் சிலர் உரிமைகோரும் மடிதியவெல வத்தை, துண்டு A மற்றும் பாதை; கிழக்கு: பாதை மற்றும் வீதி (பிரதேச சபை) ; தெற்கு: பாதை மற்றும் வீதி (பிரதேச சபை); மேற்கு: இந்த காணியின் எஞ்சிய பகுதி , ரீ நந்தன மெண்டிஸ் மற்றும் இன்னும் சிலர் உரிமைகோரும் மடிதியவெல வத்தை, மற்றும் துண்டு A.

EOG 09-0117

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.